TNED140018632025

Presented on : 26-09-2025
Registered on : 26-09-2025
Decided on : 22-06-2026
Duration : 0 years, 8 months, 26 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 8ம் நாள்
2026ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.388/2025**

மாநில அரசுக்காக
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
அம்மாபேட்டை காவல் நிலையம்,
அம்மாபேட்டை
குற்ற எண்.222/2025. ..... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

பிரகாஷ் (38/2025)
த.பெ.பெருமாள் ..... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | காவல் உதவி ஆய்வாளர், அம்மாபேட்டை காவல் நிலையம், அம்மாபேட்டை குற்ற எண்.222/2025. |
| 2. | எதிரி பெயர் | பிரகாஷ் (38/2025) த.பெ.பெருமாள் |
| 3. | எதிரி முகவரி | க.எண்.109 அந்தியூர் காலனி, மைக்கேல்பாளையம் அஞ்சல், அந்தியூர் (வட்டம்), ஈரோடு மாவட்டம். |
| 4. | குற்ற நிகழ்வு நாள் | 22.07.2025 |
| 5. | புகார் தேதி | 23.07.2025 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | N/A |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.22 18:35:03 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | Bailed by Police | | |
| 8. | Commitment | N/A | | |
| 9. | பிரிவு 355 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | U/s.359 petition in MP.No.1/2026 and dismissed on 01.06.2026. | | |
| | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 01.06.2026 | 01.06.2026 |
| | | அ.சா.2 | 01.06.2026 | 01.06.2026 |
| | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 05.06.2026 | | |
| 11. | தண்டனை அல்லது உத்தரவு | 22.06.2026 | | |
| 12 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 22.06.2026 | | |
| 13 | காலதாமதத்திற்கான காரணம் | அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம் | | |

இவ்வழக்கு கடந்த 26.09.2025ம் தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II திருமதி. P.கயல்விழி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.சுரேஷ் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்–</u>

கடந்த 22.07.2025ம் தேதி மதியம் 02.30 மணி சுமாருக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அந்தியூர் தாலுக்கா, பூனாச்சி அஞ்சல், அட்டவணைப்புதூர், இந்திரா நகர், கோனாமூக்கனூர் கதவு எண். 680 என்ற முகவரியில் சாட்சி–1 நித்யா அவரது பெற்றோர்கள் வீட்டில் இருந்தபோது எதிரி, சாட்சி –1 நித்யாவை பெண் என்றும் பாராமல் கெட்டவார்த்தையால் பொது இடத்தில் ஆபாசமாகவும், அருவருப்பாகவும் பேசி திட்டியும், சாட்சி–1 நித்யாவை கையால் அடித்தும் கீழே தள்ளி மறைத்து வைத்திருந்த



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.22 18:35:16 +0530

கத்தியை எடுத்து வலது கழுத்தில் அறுத்தும் சாதாரன காயத்தை ஏற்படுத்தியும், சாட்சி–1 நித்யாவை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியும் கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்றும், எனவே, எதிரி பிரிவு 296(b), 118(1), 351(2)BNS ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, அம்மாபேட்டை காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக பிரிவு 230 BNSSன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(2)BNSன் கீழும், குற்றச்சாட்டினை வனைந்து பிரிவு 274 BNSSன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சான்றுப்பொருள் மற்றும் சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

4.1 கடந்த 22.07.2025ம் தேதி மதியம் 02.30 மணி சுமாருக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அந்தியூர் தாலுக்கா, பூனாச்சி அஞ்சல், அட்டவணைப்புதூர், இந்திரா நகர், கோனாமூக்கனூர் கதவு எண். 680 என்ற முகவரியில் சாட்சி–1 நித்யா அவரது பெற்றோர்கள் வீட்டில் இருந்தபோது எதிரி, சாட்சி –1 நித்யாவை பெண் என்றும் பாராமல் கெட்டவார்த்தையால் பொது இடத்தில் ஆபாசமாகவும், அருவருப்பாகவும் பேசி திட்டியும், சாட்சி–1 நித்யாவை கையால் அடித்தும் கீழே தள்ளி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வலது கழுத்தில் அறுத்தும் சாதாரன காயத்தை ஏற்படுத்தியும், சாட்சி–1 நித்யாவை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியும் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.22 18:35:18 +0530

4.2 அ.சா.2 லெனின் சிறப்பு உதவியாளராக பணியில் இருந்தபோது, கடந்த 23.07.2025ம் தேதியன்று அதிகாலை 1:30 மணிக்கு நிலைய தலைமை காவலர் செங்கோடன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபொழுது, நித்யா என்பவரது அசால்ட் இன்டிமேஷனை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த நித்யா என்பவரை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலைய குற்ற எண் 222/2025, சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351 (2) BNS கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற தான் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான வெற்றிவேல் மற்றும் கார்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அ.சா.ஆ.4 பார்வை மகஜரும், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் நித்யா, ராமன், மினியம்மாள், கந்தசாமி, வெற்றிவேல் மற்றும் கார்த்திக் அவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர், எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 24.07.2025 தேதியன்று பூணாச்சி பஸ் நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி பிரகாஷ் என்பவரை தகவலாளி அடையாளம் காட்ட அவரை விசாரித்தபோது, குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து, பின்னர் தக்க நிலைய பிணையில் விடுவித்தும், கடந்த 18.08.2025ம் தேதியன்று வாதி நித்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த அந்தியூர் அரசு மருத்துவமனை மருத்துவர் விஜயா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்றும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 18.08.2021 தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351 (2) BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டது.

5. இந்நிலையில், இவ்வழக்கு 01.06.2026 அன்று அ.சா.1 உடன் எதிரி சமாதானமாக சென்றுவிட்டதாக கூறி பிரிவு 359(2)BNSSன் கீழ் MP.No.1/2026 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு 296(b), 118(1) BNSன் கீழான குற்றங்கள் சமரசத்திற்குறிய குற்றங்கள் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.22 18:35:22 +0530

6. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிளை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(ஆ)BNSSன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.

7. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 296(b), 118(1), 351(2)BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

8. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்களை பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 நித்யா தனது சாட்சியத்தில், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனக்கும், எனது கணவர் பிரகாசுக்கும் ஏற்பட்ட தகராறு தொடர்பாக ஏற்பட்ட காயத்திற்காக நான் அந்தியூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த போலீசார் விசாரித்து தன்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றும், தனது கணவரின் மீது இருந்த கோபத்தினால், தான் குடும்ப சண்டையை மிகைப்படுத்தி கூறிவிட்டதாகவும், குடும்ப பிரச்சினை என்பதால் தற்போது தனக்கும், தனது கணவருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் தான் தனது கணவருடன் இணைந்து சமாதான மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.1யை இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

9. மேலும் வழக்கு சம்பவம் குறித்து இரு தரப்பினர்களுக்கிடையே சமாதானம் ஆகிவிட்டதனால் எதிரி மீதான குற்றசாட்டு அரசு தரப்பில் நிரூபித்ததாக இந்நீதிமன்றம்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.22 18:35:24 +0530

தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 எதிரியை வழக்கு சம்பவத்தோடு இணைவுபடுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

10. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.2 திரு. லெனின் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம், அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை, அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.6 காயச்சான்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பார்வையிடுகையில் அரசுத்தரப்பு சாட்சிகளான புகார்தாரர் அ.சா.1 அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ள அ.சா.2 திரு. லெனின் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சாட்சியத்தை மட்டும் வைத்து, அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது. எனவே அரசுத்தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12. மேலும் சென்னை உயர்நீதிமன்றம் State VS Murugan 2010 (3) MLJ (Crl) 72 பின்வருமாறு கூறுகிறது " When the prosecution has not come out with the correct version of the genesis of the occurence there is no option left to the Court butt to disbelieve the prosecution case is squarely applicable to the to the present case.

13. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Balu Sonba Shinde VS State of Maharashtra 2007 (7) SCC 543 “ with regard to material witness turning hostile to the case of prosecution has held that, in the absence of any kind of clinching evidence to connect the appellants with the crime, it would not be appropriate sustain the conviction.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.22 18:35:27 +0530

14. மாண்புமிகு உச்சநீதிமன்றம் State of Maharastra VS J.B Singh AIR 2000 SC 3562 " when the statement of the prosecution witness cannot establish the case of the prosecution and no material is available to prove the offence, the accused cannot be held to be guilty.

15. எனவே, மேற்படி முன்தீர்ப்பு மற்றும் இவ்வழக்கின் சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரி மீது அரசு தரப்பில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. **முடிவாக,** எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளான எதிரி **பிரிவுகள் 296(b), 118(1), 351(2)BNS ன் கீழும்** குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை **பிரிவு 271(1)BNSSன்** கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் கைப்பற்றுவதற்கான வழக்குச் சொத்து எதுவும் இல்லை எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

18. இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்து என்னால் திருத்தப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.22 18:35:30 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**

**பவானி.**

<u>இணைப்பு:</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.நித்யா. | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.லெனின், . | சிறப்பு உதவி ஆய்வாளர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| அ.சா.எண். | தேதி | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டது. | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.07.2025 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம். | அ.சா.1 | அசல் |
| அ.சா.ஆ.2 | 23.07.2025 | புகார் வாக்குமூலம். | அ.சா.2 | அசல் |
| அ.சா.ஆ.3 | 23.07.2025 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2 | அசல் |
| அ.சா.ஆ.4 | 23.07.2025 | பார்வை மகஜர். | அ.சா.2 | அசல் |
| அ.சா.ஆ.5 | 23.07.2025 | மாதிரி வரைபடம். | அ.சா.2 | அசல் |
| அ.சா.ஆ.6 | 23.07.2025 | காயச்சான்று. | அ.சா.2 | நகல் |

<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>: –

<u>எதிரி தரப்புகள் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u> – இல்லை –

<u>குறிப்பு:</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.22 18:35:36 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி**